[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—INFORMATION *RE* ALLEGED INCORRECT PUBLICATION OF THE PROCEEDINGS IN THE PRESS.

SRI A. V. P. ASAITHAMBI : On a point of clarification சார், நேற்று கேள்வி நேரத்தின்போது விநாயகர் அமர்ந்திருக்கிற அரசமரத்திற்கு வரி விலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் "அதற்கு வரி விலக்கு இருக்கிறது" என்பதாகப் பதில் சொன்னதாக நினைவு. ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் "வரி இருக்கிறது" என்பதாகப் பிரசுரம் செய்யப்பட்டு இருக்கிறதே. சபை நடவடிக்கை குறிப்புகளில் எப்படி இருக்கிறது ? எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : எது உண்மை என்றால் அமைச்சர் அவர்கள் சொன்ன பதில்தான் உண்மையென்று சொல்வேன். இதைப் பற்றி என் அறையில் வந்து சந்தித்துப் பேசுங்கள். அவசியமானால் ஒரு பிரிவிலேஜ் மோஷன் எழுப்புங்கள். நான் பதில் சொல்கிறேன்.

SRI K. VINAYAKAM : திரு. ஆசைத்தம்பி நடத்துகிற பத்திரிகையிலேயே அந்த மாதிரி செய்தி வந்திருக்கிறதே, அது உண்மை தானா ?

MR. SPEAKER : அவர் பத்திரிகையிலேயே எழுதியிருந்தாலும் அவர் இந்தச் சபையில் வந்து பதில் சொல்ல வேண்டியது தான்.

III.—GOVERNMENT RESOLUTION.

CONSTITUTION OF A TOWNSHIP FOR THE KODAIKANAL MUNICIPALITY.

MR. SPEAKER: The next item in the Agenda is the Government Resolution relating to the Constitution of a Township for the Kodaikanal Municipality. The consideration of this resolution which was moved the other day was postponed, as hon. Members wanted time to study. The resolution is before the House for discussion. . . . . . . If no hon. Members is willing to speak, I will put the resolution to the vote of the House.

*SRI A. R. SUBBIAH MUDALIAR : குற்றாலம் டவுன்ஷிப்படி கோடைக்கானலைக் கொண்டுவருவதுபற்றி சந்தோஷப்படுகிறேன். நடைமுறையில் குற்றாலம் சம்பந்தப்பட்ட மட்டில் சில கஷ்டங்கள் இருப்பதை அநுபவ ரீதியில் நான் தெரிந்துகொண்டு கோடைக்கானலுக்கும் அந்தக் கஷ்டங்கள் வந்து விட வேண்டாம் என்ற எண்ணத்துடன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

டவுன்ஷிப் கமிட்டியில் **non-official** மெம்பர்கள் போடப்படுகிறார்கள், சர்க்கார் நியமனம் மூலமாக உருவாக்கப்படுகிறது. **Non-official** ஆக உருவாக்கப்பட்ட யோசனைகளை அதன் தலைவர் ஜில்லாக் கலெக்டர் ஏற்றுக்கொள்வதில்லை. நான் அபிஷியல் கோரிக்கையை (Policy Schemes) பற்றிச் சொல்லும்போது அதற்கு மதிப்புக் கொடுக்கிறது இல்லை. ஏனென்றால் அவர்களுக்குக்கீழ் கட்டுப்பட்ட அபிஷியல்ஸ் இருப்பதனால் கலெக்டர் என்ன நினைக்கிறாரோ அதன்படியே மற்றவர்கள் நடந்து போவதனால் நான்-அபிஷியல்ஸ் யோசனைகள் எடுபடுவதில்லை. நான்-அபிஷியல் யோசனைகளுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தில் விதி வேண்டுமென்பது என் கோரிக்கை. அத்துடன் திட்டங்கள் உருவாக்கப்படுகிறது. கலெக்டருக்கு ஜில்லா பூராவும் அதிகாரம் இருந்து கொண்டிருப்பதனால் அவர்கள் வந்து பார்த்து ஒரு நாள் ஆவது கலந்து கொள்வது என்பதே முடியாததாக இருக்கிறது. அநேகமாக ஒரு நேரம்

குறிப்பிட்டிருந்தால் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் வருவது கிடையாது. நான்-அபிஷியலை கலந்து கொண்டு நேரம் குறிப்பிடுவதும் கிடையாது. குற்றாலம் சம்பந்தப்பட்ட மட்டில் அந்தக் கஷ்டத்தை அனுபவிக்கிறோம். நான்கு மணிக்குக் கூட்டம் என்று போட்டால் அநேகமாக கலெக்டர் 6 மணிக்கு வருகிறார்கள். கலெக்டர் ப்ரோக்ராம் பிரகாரம் அவர்களுக்கு என்றைக்கு வேலை இல்லாமல் இருக்கிறதோ அன்றைக்கு டவுன்ஷிப் மீட்டிங்கை வைத்துக்கொள்ளுகிறார். நான்—அபிஷியல் சௌகர்யத்தை கவனிப்பது கிடையாது. நான் மூன்று மீட்டிங்கிற்கு போயிருந்தேன். நாலாவது கூட்டத்தில் நான்-அபிஷியல் சௌகர்யத்திற்கு கொஞ்சம் கொஞ்சம் கவனித்து அடுத்த கூட்டத்தைப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னேன். அதற்கு சேர்மன் எனக்கு என்றைக்கு சௌகர்யம் இருக்கிறதோ அப்பொழுதுதான் போட்டுக் கொள்வேன் என்று தெரிவித்தார். நான்-அபிஷியல்களை கலெக்டர் கலந்து கொள்ளாமல் திடீரென்று கூட்டத்தை நடத்துவதால் கஷ்டமாக இருக்கிறது. இதை அவர்களிடம் பல தடவை சொல்லியும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. நான் பக்கத்து ஊர் வாசியாக இருப்பதனால் என்னை Vice-Chairman ஆக போட்டிருக்கிறார்கள். இருந்தும் என்னாலே ஒரு வித வேலையும் செய்ய முடிவதில்லை. கோடைக்கானல் டவுன்ஷிப் கமிட்டித் தலைவராக ஒரு Technical man-ஐப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவராக Retired Technical officer போட்டால் நன்றாக இருக்கும். ஆற்றல் பொருந்திய சேர்மன் ஆக இருந்தால் அதிக பங்கு கொண்டு உழைக்க முடியும். மேலும் கலெக்டர் மதுரையில் இருந்து கோடைக்கானலுக்கு போவதென்றால் மற்ற வேலைகளை விட்டு விட்டு போக வேண்டியிருக்கும். ஆகையால் Non-official சேர்மனாக போடவேண்டும். கலெக்டருக்கு ஜில்லா பொறுப்பு அதிகமாக இருப்பதனால் கோடைக்கானல் வேலை கஷ்டமாக இருக்கும். கோடைக்கானலில் பெரிய உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அதிகப் பேர்கள் permanent ஆக குடியிருக்கிறார்கள். ரிடயரான டெக்னிகல்மென் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை நியமிக்கலாம். கோடைக்கானலில் டவுன்ஷிப் கமிட்டியின் நன்மையைக் குறித்துத்தான் இந்த யோசனையைச் சொல்லுகிறேன். குற்றாலம் டவுன்ஷிப் கமிட்டியில் நமது முதல் அமைச்சர் அடிக்கடி அக்கரை எடுத்துக் கொள்ளுகிறார்கள். நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

MR. SPEAKER : இந்தச் சபை முன் விவாதத்தில் இருக்கக்கூடிய விஷயம் கோடைக்கானலைப் பற்றியது. அதனால் கனம் அங்கத்தினர் குற்றாலத்தைப்பற்றிப் பேசுவது பொருத்தமாகாது என்று நினைக்கிறேன். குற்றாலம் டவுன்ஷிப் கமிட்டியைப்பற்றிச் சொல்வது சரியல்ல. ஆகவே குற்றாலத்தைப்பற்றிப் பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : குற்றாலத்தில் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தால்தான், இதே மாதிரி கோடைக்கானலிலும் ஏற்படக்கூடாது என்பதற்குத்தான் அதை எடுத்துப் பேசினேன். ஆகவே கலெக்டரை சேர்மனாக போடாமல் Retired non-official-ஐ சேர்மனாக போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கோடைக்கானல் நகர அமைப்புக் குழு அமைக்கக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கும் இந் நிலைக்கு ஏற்ப நான் இந்தத் தீர்மானத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, நகர சபை நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும், வசதிகளையும் அளிப்பதற்கான வாய்ப்பை இன்று பெற்றிருக்கவில்லை. நகர சபையில் உள்ளவர்கள் அவ்வாறு வசதியும் வாய்ப்பும் பெற்றிருந்தால் எந்த நகரமும் வளர்ச்சி அடைய முடியும். பொதுவாக டவுன்ஷிப் குழு ஏற்படுத்துகின்ற இடங்களில் எல்லாம் ஒவ்வொரு இடத்திலேயும் பெரும்பாலும் நிர்வாகம், அரசாங்க

[Sri K. Anbazhagan] [9th April 1960

அதிகாரிகளிடம் இருப்பதனால் பொதுவாக பொது மக்களின் நலம் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிறது. தனிப்பட்ட அதிகாரிகள் அதிகார மனப்பான்மையில் நடந்துகொள்வதன் காரணமாகத்தான் இவ்விதம் நேருகிறது என்பதை எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் விளக்கினர். குற்றாலத்திற்கு வரக்கூடிய நோய் கோடைக்கானலுக்கு வரக்கூடாது என்று தான் அவர்களும் சொன்னார்கள். மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியைப் பற்றியும் அங்கிருந்து குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பரிகாரம் தேடாமல் இருந்தால் அரசாங்கத்திடம் பொது மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்? ஆகவே அரசாங்கம் பொது மக்களுக்கு ஏற்ற முறையில் அங்குள்ள பொது மக்களின் பிரதி நிதிகளை டவுன்ஷிப் குழுவில் இடம் பெறச்செய்து பல்வேறு வகையில் அந்த நகரத்தை விரிவுபடுத்துவதற்கும், வளர்ச்சி அடைவதற்குமான ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் நிர்வாகம் சரியான முறையில் இயங்க முடியும்.

நகர அமைப்புக் குழுவில்—அதன் நிர்வாகத்தில் குற்றம் குறைகளை அறிவதற்கும் நீக்குவதற்கும், மேலும் நிர்வாகம் சரியாக நடைபெறு வதற்கும் பொது மக்களின் ஆர்வம் ஓங்குமாறு பொது மக்களின் பிரதி நிதிகளை இடம் பெறச் செய்யவேண்டும். இவ்வாறு கோடைக்கானல் நகர அமைப்புக் குழு ஏற்படுத்தினால் அப்பகுதி நல்ல முறையில் வளர்ச்சி அடைய முடியும். ஊட்டியாவது கவர்னர் அவர்கள் அடிக்கடி போவ தனாலும், ஒரு முறை சட்ட சபை அங்கு கூட்டப்பட்டதினாலும் வளர்ச்சி பெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. இதுவே வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு அல்ல என்றாலும் மற்ற நகரங்களில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தக்க உதவி செய்ய முன் வரவேண்டும். கோடைக்கானலில் டவுன்ஷிப் குழுவை அமைப்பதுமூலம் அங்குள்ள குறைகளை நீக்குவதற்குத் தக்க வழி காண வேண்டும் என்று சொல்லி, நான் பொதுவாக இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர் களே, கோடைக்கானலில் டவுன்ஷிப் அமைக்கவேண்டுமென்ற தீர் மானத்தை வரவேற்று ஆதரிக்கும் முறையில் நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கோடைக்கானல் தமிழ் நாட்டிலே மிகச் சிறந்த ஒரு சுக வாசஸ்தலம். என் தமிழ் நாட்டிலே மட்டும் அல்ல தென் இந்தியாவிலேயே ஒரு நல்ல சுக வாசஸ்தலம் என்று சொல்லலாம். இந்த சுக வாசஸ்தலத்தில் மக்கள் சென்று நல்ல காற்று அனுபவிக்கவேண்டு மென்றுதான் அங்கு ஒரு டவுன்ஷிப் இருக்கவேண்டுமென்று முடிவிற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அங்கே போகக்கூடியவர்கள் குபேரர்கள் என்று சொல்லக்கூடியவர்கள்தான். அங்கே ஏழை களும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும், விவசாயிகளும், தொழி லாளிகளும் அங்கு போய் சுகத்தை அனுபவிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவேதான் ஏழை மக்கள் அனுபவிக்கக்கூடிய அளவிற்கு ரயில்வே கட்டணத்தையும், பஸ் கட்டணத்தையும் குறைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் தொழிலாளர்களும், ஏழை மக்களும் அங்கு போக முடியும். அவர்கள் ஓய்வு பெறுவதற்கு லீவ் எடுத்துக்கொள்கிறார்கள். அந்த சமயத்தில் அவர்கள் அதிக பணம் செலவழிக்காமல் அங்கு சென்று தங்கி அனுபவிக்க முடியும். சர்க்கார் இதை எல்லாம் கவனித்து கண்டிப்பாக அவர்களுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபோல் கோடைக் கானலில் டவுன்ஷிப் அமைக்கக்கூடிய நேரத்திலே அங்கத்தினர்களை சர்க்காரே நியமிக்கிறார்கள். அம்மாதிரி அவர்களை நியமிக்காமல் தேர்தல் மூலமாக அங்கத்தினரை நியமிக்கும் ஒரு முறை இருந்தால்

9–30 p.m. மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் கனம் அமைச்சரவர்கள் சொல்லலாம் சட்டத்தில் இடமில்லை, நியமனம் தான் செய்யவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது என்று. சட்டத்திலே தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் அது திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று இந்தச்

9th April 1960] [Sri V. K. Kothandaraman]

சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். அப்படி திருத்தியமைப்பதற்கு முன்னால் இந்த டவுன்ஷிப் அமைக்கப் பட்டாலும்கூட கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லாக் கட்சி களிலும் உள்ளவர்களுக்கும் சலுகை கொடுத்தால்தான் ஊழல் இல்லாமல் நல்ல முறையில் நிர்வாகம் நடக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். அதேபோன்று டவுன்ஷிப்பைப் பொறுத்த வரையில் அதன் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டை சட்டசபையில் வைப்பது கிடையாது என்று நினைக்கிறேன். ஆகவே இன்றிருக்கக்கூடிய டவுன்ஷிப் களுடையவும், இப்பொழுது வர இருக்கிற டவுன்ஷிப்பினுடையவும் அட் மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டை சட்டசபையில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதோடு ஏழை மக்கள் இந்த சுகவாசஸ்தலத்தை அனுபவிக்கக்கூடிய தன்மையில் அது இருக்க வேண்டும். அதே போன்று ஜனநாயக அடிப்படையில் தேர்தல் மூலம் அதை அங்கு கொண்டுவரக்கூடிய அடிப்படையில் இருந் தால் ரொம்பவும் நலமாயிருக்குமென்று தெரிவித்துக் கொள் கிறேன். ஆகவே இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவார்கள் என்று நம்பிக்கொண்டு இதை வரவேற்று எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கோடைக்கானல் ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டர். அதை ஒரு டவுன்ஷிப்பாக்க வேண்டுமென்று சர்க்கார் இந்த மசோதாவை இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். நமது பிராந்தியத்தில் கோடைக்கானல் ஒரு முக்கியமான டூரிஸ்டு (Tourist) ஸ்டேஷனாகும். ஆகவே, மத்திய அரசாங்கத்திலிருந்தும் நமது அரசாங் கத்திலிருந்தும் பொருள் உதவி கொடுத்து, எவ்வளவு தூரம் அந்த இடத்துக்கு வசதிகள் செய்து கொடுக்கமுடியுமோ அவ்வளவையும் செய்து கொடுத்து அதை ஒரு டூரிஸ்ட் சென்டராக்குவதில் முக்கியமான கவனம் செலுத்தவேண்டுமென்பதில் யாருக்குமே அபிப்பிராயம் பேதம் இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்கள் குற்றாலத் தில் ஏற்படுத்தியிருக்கும் டவுன்ஷிப்பிலுள்ள கோளாறுகளைப்பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட கோளாறுகள் இந்த டவுன்ஷிப்பில் ஏற்படா மல் அவைகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குழுவில் அங்கத்தினர்களை நியமிக்கும்போது எல்லாக் கட்சிகளிலிருந்தும் பொறுக்கியெடுத்து முக்கியமாக, உத்தியோகத்தில் இல்லாதவர்கள் சொல்லக்கூடிய குறைகளை எல்லாம், பிரசிடென்டாக இருக்கப்போகும் கலெக்டர் அவர்கள் அவைகள் எல்லாவற்றையும் கவனித்து மெஜாரிட்டி பேரில் பாஸ் செய்வதைத்தான் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நிபந்தனையை ஏற்படுத்தி நல்ல விதத்தில் இந்தக் குழு நிர்வாகம் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய கவனத்தை சர்க்கார் செலுத்த வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா வித வசதிகளையும், உதவிகளையும், பண வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். அம்மாதிரி செய்தால் நாங்களும் இதை வரவேற்கிறோம் என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : கோடைக் கானல் நல்லதொரு "சுகவாசஸ்தலம்". அதை ஒரு டவுன்ஷிப்பாக ஆக்கவேண்டுமென்பதற்கு கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். அதை ஒரு டவுன்ஷிப்பாக்க வேண்டுமென்பது இப்பொழுதுள்ள எண்ணம். கோடைக்கானலைப் பொறுத்த வரையில் இப்பொழுதுள்ள நிலைமை, அதை ஒரு டவுன்ஷிப்பாக மாற்றாவிட்டால் அந்த இடத்திற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க முடியாது. அது நல்ல முறையில் நடத்தப்பட வேண்டுமென்று அங்கத் தினர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதிலும் விசேஷமாக சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்பொழுது, அவர்கள் குற்றாலத்தை மனதில் வைத்துக்கொண்டு அங்கு என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிச் சொல்வதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தினார்கள் என்று தோன்றுகிறது. அவர் பேசியது, ஒரு தனிப்பட்ட அதிகாரியின் செயல்

அவர்களுக்கு ஒவ்வாத காரணத்தினால் அந்த முறையில் பேசியதாகத் தெரிகிறது. பொது மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதை ஒரு டவுன்ஷிப்பாக அமைக்க வேண்டுமென்று இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. வசதிக் குறைவாயிருப்பவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அங்கு வீட்டு வசதி ஏற்படுத்திக்கொடுப்பது போன்ற காரியங்களில் கோடைக்கானலை டவுன்ஷிப்பாக்கிய பின்னர் கவனிப்பது தான் நலமென்று நினைக்கிறேன். இப்பொழுது அங்கு மத்திய சர்க்கார் அவர்கள் செலவில் இரண்டு ரெஸ்ட் ஹவுஸ்கள் 2·5 லட்சம் ரூபாய் செலவில் கட்ட உத்தேசமிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கமும் நமது அரசாங்கமும் சேர்ந்து "லோ இன்கம் க்ரூப் ரெஸ்ட் ஹவுஸ்" கட்டுவதற்கு, 2½ லட்சம் ரூபாய் செலவில் செய்ய உத்தேசித்திருக்கின்றது. அதோடு அங்கு போட்டிங் பெஸிலிட்டீஸுக்காக நமது அரசாங்கம் 25,000 ரூபாய் செலவு செய்ய எண்ணமிருக்கிறது. இவ்விதமாக அதை ஒரு டவுன்ஷிப்பாக்கி மக்களுக்கு எல்லா விதமான சௌகர்யங்களையும் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, இதை ஒரு டவுன்ஷிப்பாக்கிய பிறகு என்னென்ன வசதிகள் செய்ய வேண்டும், என்னென்ன மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் பற்றி அங்கத்தினர்கள் தங்கள் அபிப்பிராயங்களை பின்னர் தெரிவிக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. இதை டவுன்ஷிப்பாக்குவதற்கு முன்னமேயே அங்குள்ள அதிகாரிகள் இப்படித்தான் நடப்பார்கள் என்றோ அல்லது நிர்வாகம் இப்படித்தான் நடக்குமென்றோ நினைக்கவேண்டியதில்லை. நல்ல அதிகாரிகள் வருவார்கள், அபிஷியல்ஸ்-ம் நான்-அபிஷியல்ஸ்-ம் சேர்ந்து கொண்டு நிர்வாகத்தை நன்கு நடத்துவார்கள் என்றுதான் எதிர்பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு நல்ல அபிப்பிராயங்களையும், ஆதரவையும், தந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the House do resolve that the area comprised within the jurisdiction of the Kodaikanal Municipality in the Madurai district which is a health resort, be declared to be a township under sub-section (1) of section 4-A of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920)."

The motion was put and carried.

IV.—GOVERNMENT MOTION.

TRANSACTION OF OFFICIAL BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I beg to move—

"That rule 23 of the Assembly Rules be suspended and that official business be transacted on Thursday, the 14th April 1960."

MR. SPEAKER: The question is—

"That rule 23 of the Assembly Rules be suspended and that official business be transacted on Thursday, the 14th April 1960."

The motion was put and carried.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61—*cont.*

DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—ADMINISTRATION.

MR. SPEAKER: We will now take up Demands for Grants for the year 1960-61. Demand No. VII.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS